# தாவீது இராஜா ஒரு கெட்டபழக்கத்தை வெற்றி கொள்ளுகிறான்

## தேவன் எவ்வாறு அவர்கள் வாழ்க்கையில் பாவத்தின் சக்தியை உடைக்கிறார் என்பதை குழந்தைகளுக்கு போதிக்கவும்

**ஜெபம்:** "கர்த்தாவே, தாவீதையும் பத்சேபாளையும் பற்றிய இந்த பாடத்தை உபயோகித்து குழந்தைகள் தங்கள் வாழ்க்கையில் உள்ள தீய பழக்கத்தை உடைக்க உதவும்."

தாவீதின் வாழ்க்கையில் இருந்த ஒழுக்கக் கேட்டின் பிடியை தேவன் எவ்வாறு உடைத்தார் என்பதை 2 சாமு. 11-12:1-23 ஐ வாசித்து ஆயத்தம் செய்யவும்.

ஒரு பெரிய குழந்தை இந்தக் கதையை வாசிக்கவோ மனப்பாடமாகக் கூறவோ செய்யலாம். பின் 2 சாமு 11:1-17 ல் உள்ள இந்தக் கேள்விகளைக் கேட்கவும். (பதில் ஒவ்வொரு கேள்விக்கும் பின்னால் வருகிறது).

- தனக்கு சொந்தம் இல்லாத எதை இராஜா எடுத்துக்கொண்டான்?
  (பதில்: வசனம் 4 தான் இராஜாவாக இருப்பதால் தான் விரும்பும் எதையும் எடுத்துக் கொள்ளும் பழக்கத்துக்கு தாவீது அடிமையானான். இது ஒரு பாவகரமான பழக்கவழக்கமாகும். இதன் விளைவாக அவன் விபச்சாரம் செய்தான்)
- தாவீது இராஜா உரியாவை எவ்வாறு ஏமாற்ற முயற்சி செய்தான் (வசனம் 8).
- தாவீது செய்த ஒரு பாவம் பல பாவங்களை எவ்வாறு செய்யுமாறு வைத்தது?
  (வசனம் 13, 14. ஒரு பாவத்தை மறைக்க முயலும் போது மோசமான பாவத்தை செய்து விடுகிறோம். தான் செய்த பாவத்தை தாவீது மறைக்க முனைந்து, பொய் கூறி, கொலையும் செய்தான்)

**2 சாமு.12:1-14 ல் இருந்து கேள்விகள்:**

- தாவீது தன் பாவத்தை அறிந்து கொள்ள உதவியாக தீர்க்கதரிசியாகிய நாத்தான் என்ன கூறினான்?
  (வசனம் 1 அவன் ஒரு கதையைக் கூறினான். நமது பாவங்களை நாம் உணர்ந்து கொள்ள உதவவும், நமக்காக ஜெபிக்கவும், நமது செயல்களுக்கு பொறுப்பை ஒத்துக்கொள்ள உதவவும் தேவன் பெரும்பாலும் ஞானமுள்ள மனிதர்களை பயன்படுத்துகிறார்)
- தாவீதின் வாழ்க்கையில் இருந்த பாவத்தின் பிடியை தேவன் உடைக்குமுன் தாவீது என்ன செய்ய வேண்டியதாய் இருந்தது (வசனம் 13).
- தேவன் தாவீதை மன்னித்தாரா?
  (வசனம் 13)
- தாவீது செய்த பாவத்தின் விளைவு என்ன?
  (வசனம் 14).

**தாவீது-பத்சேபாள் கதையின் சில பகுதியை நாடகமாக்குக**

- இந்த நாடகத்தைப் பிள்ளைகள் நடிக்க சபை ஆராதனையை நடத்தும் தலைவரோடு பேசி ஏற்பாடு செய்யவும்.

- பெரிய பிள்ளைகள் சிறு பிள்ளைகள் ஆயத்தப்பட உதவட்டும்
- பெரிய பிள்ளைகள் அல்லது பெரியவர்கள், நாத்தான், தாவீது, பத்சேபாள், உரியா மற்றும் கதை கூறுபவர் பாத்திரங்களை ஏற்கட்டும் (கதை கூறுபவர்: கதை சுருக்கத்தைக் கூறி, பிள்ளைகள் பேச வேண்டியதை நினைவுபடுத்த உதவ வேண்டும்)
- சிறு பிள்ளைகள், வில்வீரன், பணக்காரன், ஏழை, ஆட்டுக்குட்டி, ஆடு வேடம் தாங்கட்டும்
- இந்த நாடகத்தில் வார்த்தைகள் குறைவாக இருக்கட்டும்
- உங்கள் குழு சிறியது என்றால், 'ஆடு-வேடத்தை' நீக்கி விடலாம் (பணக்காரன் எண்ணுவது போல் பாவனை காட்டலாம்)

**கதை கூறுபவர்:** 2 சாமு 11:1-17 லிருந்து கதையின் முதல் பகுதியைக் கூறட்டும். பின்: "தாவீது தனக்குள்ளாக பேசிக்கொள்வதைக் கேளுங்கள்:"

**தாவீது:** (கர்வத்தோடு சுற்றிலும் பார்த்துக் கூறுகிறான்) "நான் இராஜா. நான் விரும்பும் எதையும் நான் செய்யலாம். நான் விரும்பும் எதையும் நான் எடுத்துக் கொள்ளுவேன்.

**பத்சேபாள்:** தாவீதுக்கு முன் நடந்து, கைகளை கழுவுவது போல் நடிக்கிறாள்.

**உரியா:** மனைவியாகிய பத்சேபாளுக்கு அருகில் நின்று, அவளையும் தாவீதையும் பார்க்காமல், வேறு திசையில் பார்க்கிறான்.

**தாவீது:** பத்சேபாளை பார்க்கிறான். பின் தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று அங்கும் இங்கும் பார்க்கிறான். தன் கையை காட்டி அவளை அழைக்கிறான்.

**பத்சேபாள்:** தாவீதிடம் போய் அவனோடு நடந்து மறைகிறாள்.

**வில்லாளி:** உரியாவை குறி வைத்து எறிவது போல் நடித்து, அம்பு செல்வது போல் "ட்டுவாங்" என்று ஒலி எழுப்புக

**உரியா:** நெஞ்சைப் பிடித்துக் கொண்டு, வேதனையால் அலறி, தரையில் விழுந்து, இறக்கிறான்.

**கதை கூறுபவன்:** 2 சாமு. 12:1-14 ல் இருந்து கதையின் 2-ம் பகுதியைக் கூற. பின், "தீர்க்கதரிசியாகிய நாத்தான் தாவீது இராஜாவிடம் கூறுவதைக் கேளுங்கள்."

**நாத்தான்:** தாவீது இராஜாவே! உனக்காக நான் காட்டும் கதையை தயவு செய்து பார்!

**ஆட்டுக்குட்டி:** ஏழை மனிதனிடம் போய், ஆட்டைப் போல கத்துதல்

**ஏழை:** ஆட்டுக்குட்டியை தடவிக்கொடுத்து "அழகான ஆட்டுக்குட்டி"

**ஆடுகள்:** ஆடுகளைப் போல போய் பணக்காரனை சுற்றி நிற்றல்

**பணக்காரன்:** தனது ஆடுகளை சத்தமாக எண்ணுதல். பின், "சாப்பிட எனக்கு ஓர் ஆடு வேண்டும்."ஏழை மனிதனிடம் இருக்கும் ஆட்டுக் குட்டியை சுட்டிக் காட்டி "அது!". அதன் கழுத்தை அறுப்பது போல் பாவனை அது தரையில் விழுகிறது.

**நாத்தான்:** இராஜாவே, இதுதான் நீ செய்தது. உனக்கு உரிமை இல்லாததை எடுத்துக் கொண்டாய். நீ சாக வேண்டும்.

**தாவீது இராஜா:** "தேவன் என்னை மன்னிக்கட்டும்! இந்தப் பாவம் என் வாழ்க்கையில் பெரிதாய் வளர்கிறது. தேவன் அதன் வல்லமையை உடைத்து விட்டார். இது முதல் நல்லபடியாக வாழ்வேன்."

**நாத்தான்:** தேவன் உன்னை மன்னிக்கிறார். ஆனால் பாவம் மோசமான விளைவுகளைக் கொண்டு வரும். பத்சேபாளின் குழந்தை சாகும்.

**கேள்விகள்:** இதை குழந்தைகள் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் மேலே பட்டியல் இடப்பட்ட கேள்விகளையும் கேட்கலாம்

**வரைய:** மலர்களுக்கு இடையில் முட்செடி படத்தை வரையவும்

ஆராதனையின் போது குழந்தைகள் தங்கள் படங்களைப் பெரியவர்களுக்குக் காட்டலாம்.

தோட்டத்தில் உள்ள களை, அதை களையாவிட்டால் பரவுவது போல, பாவமும் பரவி மேலும் பாவங்களைப் பிறப்பிக்கும். பாவங்களுக்காக வருந்தி மன்னிப்பு கேட்கும்போது தேவன் பாவத்தின் பிடியில் இருந்து நம்மை விடுவிக்கிறார்.

கலந்துரையாடல்: மக்கள் வாழ்க்கையில் கெட்ட பழக்க வழக்கங்களை தேவன் முறிப்பது குறித்த வேறு உதாரணங்களை பிள்ளைகளும், பெரியவர்களும் கூறலாம்.

பாடல்: சங். 51:14-17 வசனங்களை பிள்ளைகள் ஒவ்வொருவராக வாசிக்கலாம்.

சங். 51 ல் உள்ள கருத்துக்களை வைத்து பெரிய பிள்ளைகள் கவிதை அல்லது பாடல் எழுதட்டும்.

மனப்பாடம் : சங். 51:12

ஜெபம்: "கர்த்தாவே, சில சமயம் எங்கள் வாழ்க்கையில் உள்ள பாவங்கள் பெரிதாகி கொண்டே வருகிறது. அவற்றின் சக்தியை உடைக்க எங்களுக்கு பலம் இல்லாதது போல் தெரிகிறது. நாங்கள் மனம் திரும்ப உதவி, ஞானமுள்ளவர்களைக் கொண்டு அவற்றில் இருந்து விலகி வாழ உதவும். இயேசுவின் நாமத்தினால், தூய்மையான வாழ்க்கை வாழ எங்களுக்கு வல்லமை தாரும்!"

Copyright © 2004 by Paul-Timothy Trainers. Download freely from www.Paul-Timothy.net